LII

பதிவு எண் / Register No.

# 2018

## சட்டத் தாள் II

## LAW PAPER II

(தமிழ் மற்றும் ஆங்கில வடிவம்)

**(Tamil & English Versions)**

TNPSC - SPECIMEN

நேரம் : 3 மணி

Duration : 3 Hours

மொத்த மதிப்பெண்கள் : 100

Max. Marks : 100

SEAL

*விண்ணப்பதாரர்களுக்கான பொது குறிப்புகள் :*

*General Instructions to Candidates :*

i) கேள்வி தாளில் கொடுக்கப்பட்டுள்ள விவரங்கள் மற்றும் சங்கதிகள், அதாவது நீதிமன்றத்தின் பெயர், இடம், வழக்கு எண் மற்றும் தரப்பினர்களின் பெயர் ஆகியவை கற்பனையே, இருப்பினும், விண்ணப்பதாரர்கள் அவைகளை சரியென எடுத்துக் கொண்டு வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்.

The facts and particulars provided in the Question Paper i.e. the court name, place, case numbers and names of parties are fictional. Yet candidates have to conclusively assume them to be true for the purposes of solving the questions.

ii) விண்ணப்பதாரர்கள் தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ விடையளிக்க வேண்டும். ஆனால் ஆங்கிலத்திலும், தமிழிலும் மாறி மாறி விடையளிக்கக் கூடாது.

Candidates may write the answers either in English or in Tamil but not in both.

iii) வினாத்தாளானது தமிழ் மற்றும் ஆங்கில வடிவங்களில் உள்ளன. ஏதேனும் சந்தேகம் இருப்பின், ஆங்கில தரப்பில் தரப்பட்டுள்ள வடிவே முடிவானது.

The Question Paper is provided in Tamil and English versions. In all matters and the cases of doubt, English version is final.

TNPSC - SPECIMEN

## சட்டத் தாள் II

# LAW PAPER II

## பிரிவு — அ

## SECTION A — (4 × 10 = 40)

## எழுவினாக்கள் வனைதல்

## FRAMING OF ISSUES

TNPSC - SPECIMEN

குறிப்பு :

Note :

i) இந்தப் பிரிவில் நான்கு கேள்விகள் உள்ளன. இவை அனைத்திற்க்கும் விடை அளிக்க வேண்டும். கொடுக்கப்பட்டுள்ள வாதுரைக்கு (Pleadings) எழு வினாக்கள் வனைதல் வேண்டும். ஒவ்வொரு கேள்வியும் 10 மதிப்பெண் கொண்டது.

This section contains four questions and all the four shall be attended. For the Pleadings provided, issues shall be framed. Each question carries 10 marks.

ii) விண்ணப்பதாரர்கள் தங்களை நீதிமன்றத்தின் நடுவராக அனுமானித்து, வழங்கப்பட்டுள்ள வாதுரைகளை கருத்தில் கொண்டு, எழு வினாக்கள் வனைதல் வேண்டும்.

The candidates are to assume the role of the Presiding Officers and they are to consider the details of the pleadings furnished herein below and frame necessary issues.

iii) விண்ணப்பதாரர்கள் வழக்கின் தலைப்பு (Cause Title), நீதிமன்ற எண், நீதிபதியின் பெயர், வழக்கின் எண், வழக்கறிஞர்களின் பெயர்கள் போன்றவை குறிப்பிட தேவையில்லை, அவ்வாறு குறிப்பிட்டாலும் அதற்கு தனியாக மதிப்பெண்கள் வழங்கப்படமாட்டாது. எழு வினா வனைதலுக்கு மட்டுமே மதிப்பெண்கள் வழங்கப்படும்.

Candidates need not write the cause title of the case, court number, the name of the Judge, case number, name of the Advocates etc., No separate marks will be awarded for writing cause title. Marks will be awarded only for the Issues framed.

TNPSC - SPECIMEN

1. <u>விளம்புகை சுவாதீனமீட்பு, இடைக்கால வருமானங்கள் மற்றும் செலவுத் தொகைக்கான தாவா :</u>

<u>தாவா சாட்டுரைகள் பின்வருமாறு :</u>

தாவா சொத்தான பஜனை மடம், பண்ருட்டி தாலுகா, வடகைலாசம், மேலபாளையத்தைச் சேர்ந்த பலிஜா நாயுடு சமூகத்தினருக்கு சொந்தமானது. வாதி, இந்நீதிமன்ற உ.வ. எண். 648/26-ல் பகரப்பட்ட உடன்படிக்கைத் தீர்ப்பாணையில் விளம்புகை செய்யபட்டவாறு இந்த பஜனை மடத்தின் பரம்பரை அறங்காவலர் ஆவார். தாவா சொத்தானது திரு.பார்த்தசாரதி நாயுடு என்பவருக்கு ரூ.15/-க்கு மாத வாடகைக்கு விடப்பட்டது. அவர் வாடகை முறையாக செலுத்தி வந்து பின்னர் செலுத்தாததால் வாடகை பாக்கி ஏற்பட்டது. அவர் நெடுங்காலமாக வாடகை செலுத்த தவறியுள்ளார். மேற்படி, திரு.பார்த்தசாரதி நாயுடு, 09.02.1975-ல், அறங்காவல் குறிப்பு புத்தகத்தில் தான் கொடுக்க வேண்டிய வாடகை பாக்கி குறித்து ஒப்புகை அளித்துள்ளார். மேற்படி. திரு.பார்த்தசாரதி நாயுடுவும், அவருடைய மகனும் குறிப்பு புத்தகத்தில் கையெழுத்திட்டு, தாவா சொத்தை சித்திரை மாதத்தில் காலி செய்ய ஒப்புக் கொண்டுள்ளனர். ஆனால் திரு.பார்த்தசாரதி நாயுடு, மேற்படி சொத்தை காலி செய்யவில்லை. மேலும், அவர் தாவா சொத்தினை பிரதிவாதிக்கு 1976-ஆம் ஆண்டு, வாடகைக்கு விட்டுள்ளார். அந்த தேதியிலிருந்து பிரதிவாதி தாவா சொத்தின் சுவாதீனத்திலும், அனுபவத்திலும் உள்ளார். பிரதிவாதிக்கு சுவாதீனத்தில் இருக்க எவ்வித உரிமையும் இல்லை. அவர், அறங்காவலின் வாடகைதாரரால், சுவாதீனத்தில் அமர்த்தப்பட்டார். பிரதிவாதி, மறைந்த திரு.பார்த்தசாரதி நாயுடுவின் சகோதரர் ஆவார். பிரதிவாதி, தாவா சொத்தினை காலி செய்ய மறுத்ததால். 05.10.1977-ல் வாதி ஒரு அறிவிப்பு அனுப்பினார். அதற்கு, பிரதிவாதி ஒரு பொய்யான பதில் அளித்து அறங்காவலின் உரிமையை மறுத்துள்ளார். பிரதிவாதி, வாதியின் உரிமையை மறுத்ததால் வாதி இத்தாவாவினை விளம்புகைக்காகவும், உரிமைமீட்புக்காகவும், இடைக்கால வருமானத்திற்காகவும் மற்றும் செலவுத் தொகைக்காக தாக்கல் செய்துள்ளார்.

<u>பிரதிவாதியின் எதிருரை சுருக்கம் :</u>

TNPSC - SPECIMEN

வாதி பலிஜா நாயுடு சமூகத்தின் பரம்பரை அறங்காவலர் அல்லாததால், வாதிக்கு இத்தாவாவினை தாக்கல் செய்ய எவ்வித உரிமையும் இல்லை. பலிஜா நாயுடு சமூகத்திற்கு உரிமையான ஒரு பஜனை மடம் உள்ளது என்ற சாட்டுரை மறுக்கப்படுகிறது. உ.வ.648/26 என்ற வழக்கில் பகரப்பட்ட தீர்ப்பாணை பிரதிவாதியை கட்டுப்படுத்தாது. தாவா சொத்து திரு.பார்த்தசாரதி நாயுடு என்பவருக்கு வாடகைக்கு விடப்பட்டது என்பதும். அவர் வாடகை செலுத்த தவறினார் என்பதும், குறிப்பு புத்தகத்தில் வாடகை பாக்கி குறித்து ஒப்புகை அளித்துள்ளார் என்பது போன்ற எவ்வித விவரமும் பிரதிவாதிக்கு தெரியாது. பிரதிவாதி ஜுன் 1976 முதல் தான் சுவாதீனத்தில் அமர்த்தப்பட்டார் என்ற சாட்டுரை மறுக்கப்படுகிறது. பிரதிவாதியும் அவருடைய மூதாதையர்களும் தங்கள் சொந்த உரிமை மூலம், 50 ஆண்டுகளுக்கும், மேலாக தாவா சொத்தின் சுவாதீனத்தில் இருந்து வருகிறார்கள். மேலும் எதிரிடை அனுபோக பாத்தியதையின் அடிப்படையிலும் அவருக்கு தாவா சொத்தின் உரிமை சித்தரித்துள்ளது. வாதி அனுப்பிய அறிவிப்புக்கு பிரதிவாதி தகுந்த பதில் அளித்துள்ளார். எனவே பிரதிவாதிக்கு எதிராக, இடைக்கால இலாபம் கோர வாதிக்கு எவ்வித உரிமையும் இல்லை. ஆகையால், இத்தாவா செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டியது.

**Suit for declaration, recovery of possession and for mesne profits with costs.**

**The averments in the plaint are briefly as follows :-**

The suit property, which is a Bajanaimadam belongs to the Balija Naidus of Melapalayam, Vadakailasam, Panruti Taluk. The plaintiff is the hereditary trustee of the said Bajanai madam, which has been so declared in the compromise decree in O.S.No.648/26 on the file of this court. The suit property was rented out to one Parthasarathi Naidu on a monthly rent of Rs.15/- and he was paying rent regularly, but later fell into arrears. He became a chronic defaulter. In the minutes book of the trust, the said Parthasarathi Naidu had acknowledged the rent due by him on 09.2.1975. The said Parthasarathi Naidu and his son have signed in the minutes book and thereby undertook to vacate the suit property by the month of Chitrai. But Parthasarathi Naidu did not vacate the property. Further, he let out the suit property to the defendant, in the year 1976 and the defendant has been in possession and enjoyment of the suit property. The defendant had no right to be in possession and he was inducted into possession only by the tenant of the trust in the year 1976. The defendant is none other than the brother of the deceased Parthasarathi Naidu. As the defendant refused to vacate the suit property, the plaintiff issued a notice on 05-10-1977, for which the defendant gave a false reply, thereby denied the title of the trust. As the defendant denied the title of the plaintiff, the plaintiff is obliged to file this suit for declaration of title, recovery of possession and for mesne profits with costs.

TNPSC - SPECIMEN

**Written statement of the defendant in brief :**

The defendant contends that the plaintiff has no locus standi to file the suit, as he is not the hereditary trustee of the Balija Naidu Community. The allegation that there is a 'Bajanai madam' which belongs to Balija Naidus community, is denied. The decree in O.S.648/26 is not binding on the defendant. The suit property was rented out to one Parthasarathi Naidu and he committed default and that he acknowledged the arrears in the minute book are not known to the defendant. The allegation that defendant was put in possession only from June, 1976 is denied. The defendant and his predecessors-in-interest are in possession of the suit property for more than 50 years in their own right and that they have in any event prescribed title to the suit property by adverse possession. The notice issued by the plaintiff was suitably replied by the defendants and the plaintiff has no right to claim any mesne profits, as against the defendant. Therefore the suit has got to be dismissed with costs.

2. <u>தாவா சொத்தில் வாதியின் பங்கு மற்றும் இடைக்கால வருமானம் கோரி இவ்வழக்கு தாக்கல் செய்யப்படுகிறது.</u>

TNPSC - SPECIMEN

<u>வாதியின் தாவா பின்வருமாறு :</u> முதல் வாதி, திரு. இராஜா பாலசுப்பிரமணிய முதலியார் என்பவரது தங்கையாவார். இரண்டு மற்றும் மூன்றாம் வாதிகள், திரு. இராஜ பாலசுப்பிரமணியம் மற்றும் முதல் வாதியின், மூத்த சகோதரியான தனபதி அம்மாள் அவர்களின் மகள்கள் ஆவர். திரு. இராஜா முதலியார் முதல் வாதியின் தந்தை ஆவார். குமரவேல் முதலியார் மற்றும் சோமசுந்தர முதலியார், திரு. இராஜா முதலியாரின் சகோதரர்கள் ஆவார்கள். சோமசுந்தர முதலியார் 1920-ஆம் ஆண்டு மறைந்தார். அவருக்கு மனைவியும் மாசிலாமணி என்ற ஒரு மகனும் உள்ளனர். குமரவேல், இராஜா மற்றும் மாசிலாமணி ஆகியோர் 24.01.1925-ஆம் ஆண்டு கூட்டுக் குடும்ப சொத்துக்கள் குறித்து ஒரு பாகப்பிரிவினை உடன்படிக்கை ஏற்படுத்தினர். அதன் மூலம், தாவா சொத்து இராஜா முதலியார் பாகத்தில் சேர்ந்தது. இராஜா முதலியார் 20.04.1925-ஆம் ஆண்டு தன் மனைவி பாப்பாத்தியம்மாள், தன் ஒரே மகன் இராஜ பாலசுப்பிரமணியம், தன் இருமகள்கள், தனபதியம்மாள் மற்றும் சாந்தநாயகியம்மாள் ஆகியோரை விட்டு மறைந்தார். தனபதியம்மாளுக்கு துரைக்கண்ணு, இரண்டாம் வாதி ஜெயலக்ஷ்மி மற்றும் மூன்றாம் வாதி நாகரத்தினம் ஆகிய மூன்று மகள்கள் உள்ளனர். தனபதியம்மாள் 1946-ஆம் ஆண்டு மறைந்தார். துரைக்கண்ணு சிங்கப்பூரில் இறந்தார். இராஜ பாலசுப்பிரமணியம், நீலம்பாள் அம்மாள் என்பவரை 1918-ஆம் ஆண்டு திருமணம் செய்தார். அவர்களுக்கு பிள்ளைகள் இல்லை, நீலம்பாள் அம்மாள் 16.03.1959-ஆம் ஆண்டு இறந்தார். இராஜா பாலசுப்பிரமணியம் அவர்கள் 18.08.1969-ஆண்டு டி.பி. சானிடோரியத்தில் இறந்தார். இராஜா முதலியார் மறைவுக்கு பின்னர் அவரது மகன் இராஜா பாலசுப்பிரமணியம், தாவா சொத்தின் முழு உரிமையாளர் ஆனார். மேலும் அவர் இறக்கும் வரை அந்த சொத்தின் சுவாதீனத்தில் இருந்து வந்தார். முதல் பிரதிவாதி, இராஜ பாலசுப்பிரமணியத்திற்கும் லோகநாயகி அம்மாளுக்கும் பிறந்தவர். இரண்டாம் பிரதிவாதி, முதல் பிரதிவாதியின் கணவர் ஆவார். இராஜ பாலசுப்பிரமணியம் மற்றும் லோகநாயகி அம்மாள் அவர்களுக்குள் இருந்த கள்ளத் தொடர்பின் காரணமாக முதல் பிரதிவாதி பிறந்தார் என்று வாதிகளால் அறியப்படுகிறது. இராஜ பாலசுப்பிரமணியம் இவ்விஷயத்தை இரகசியமாக வைக்க வேண்டும் என்று நினைத்ததால், அவர் அச்சம்பவத்தையோ அல்லது தனக்கு ஒரு குழந்தை பிறந்ததையோ தன்னுடைய உறவினர்கள் எவருக்கும் தெரியப்படுத்தவில்லை. முதல் பிரதிவாதி பிறந்த ஒரு வருடம் கழித்து இராஜா பாலசுப்பிரமணியம் அவர்களுக்கும் லோகநாயகி அம்மாள் அவர்களுக்கும் ஏற்பட்ட மன கசப்பினால் லோகநாயகி அம்மாள் சென்னையை விடுத்து இரும்புளியுர் சென்று விட்டார். குழந்தை இராஜா பாலசுப்பிரமணியம் மற்றும் லோகநாயகி அம்மாள் அவர்களிடம் இருந்து வந்தது. 1961-ஆம் ஆண்டு முதல் பிரதிவாதிக்கும் இரண்டாம் பிரதிவாதிக்கும் இடையே சென்னையில் திருமணம் நடைப்பெற்றது. இராஜாபாலசுப்பிரமணியம் 1955-ஆம் ஆண்டு பணியிலிருந்து ஓய்வு பெற்று பின்னர் 5 ஆண்டு காலம் மெசர்ஸ்.டி.ஐ. சைக்கிள்ஸ் ஆஃப் இந்தியா லிமிடட், என்ற நிறுவனத்தில் காவல் அதிகாரியாக பணிபுரிந்தார். அச்சமயம், அவர் வாலாஜாபாத்தில் உள்ள தனது சொத்துக்கள் சிலவற்றை விற்பனை செய்து அதன் மூலம் பெற்ற தொகை மற்றும் அவரது பணிப்பலன்கள் கொண்டும் தாவா சொத்தை முழுமையாக புதுபித்தார். இராஜா பாலசுப்பிரமணியம் அவர்களின் மறைவுக்கு பிறகு, முதல் பிரதிவாதி, தான் இராஜா பாலசுப்பிரமணியத்தின் வாரிசு என்று கூறி சிறிதளவு பணம் மற்றும் அவருடைய சொந்த பொருட்கள் சிலவற்றை கோரி 27.03.1971-ல் இரண்டாம் வாதியின் கணவர் சீதாராம முதலியாருக்கு ஒரு அறிவிப்பு அனுப்பினார்.

அக்கோரிக்கையானது 27.04.1971-ம் தேதியிட்ட அறிக்கை வாயிலாக உடனுக்குடன் மறுக்கப்பட்டது. இராஜா பாலசுப்பிரமணியம் அவர்கள் சட்டபூர்வ வாரிசுகள் எவருமின்றி இறந்தார் என வாதி குறிப்பிடுகின்றார். முதல் பிரதிவாதி இராஜா பாலசுப்பிரமணியம் அவர்களின் சட்டபூர்வ வாரிசு அல்ல, எனவே இராஜா பாலசுப்பிரமணியம் அவர்களின் சொத்து மற்றும் அவரது உடமைகள் மீது முதல் பிரதிவாதிக்கு எவ்வித உரிமையும் இல்லை. இராஜா பாலசுப்பிரமணியம் மற்றும் லோகநாயகி அம்மாள் ஆகியோருக்கிடையே கணவன் மனைவி என்ற உறவுமுறை இல்லாத காரணத்தால் முதல் பிரதிவாதி அவர்களுடைய சட்டபூர்வ மகளாக இருக்க முடியாது. முதல் மற்றும் இரண்டு பிரதிவாதிகளுக்கு சொத்தின் சுவாதீனத்தில் எவ்வித உரிமையும் இல்லை. தாவா சொத்தில் பிரதிவாதிகள் சட்டத்திற்கு புறம்பாக வசிக்கின்றார்கள். இராஜா பாலசுப்பிரமணியத்தின் ஒரே வாரிசு என்ற முறையில் முதல் வாதிக்கு தாவா சொத்தில் ஒரு பாதி உரிமை உள்ளது. அவர்களுக்கு, இராஜா பாலசுப்பிரமணியம் இறந்த தேதி முதல் பிரதிவாதிகளிடமிருந்து இடைகால வருமானம் பெற உரிமை உள்ளது, ஆனால் அவர்கள் தாவா தாக்கல் செய்த தேதி வரை இடைக்கால வருமானம் குறித்த கோரிக்கையை கைவிட்டுள்ளனர். அவர்கள் தாவா தாக்கல் செய்த தேதி முதல் இடைக்கால லாபம் கோருகின்றனர். முதல் வாதி இறந்தவராக அறிவிக்கப்பட்டு. 4, 5 வாதிகள் அவருடைய சட்டப்பூர்வ பிரதிநிதிகளாக 08.03.1974 தேதியிட்ட, இ.வ.எண் 246/74 வழக்கில் பகரப்பட்ட உத்திரவின் பேரில் சட்டப்பூர்வ பிரதிநிதிகளாக சேர்க்கப்பட்டனர். எனவே இத்தாவா, வாதிகள் தாவா சொத்தின் கூட்டு உரிமையாளர்கள் என்று விளம்புகை செய்யவும், தாவா சொத்தின் 4 எல்லைகள் பிரித்து பாகப்பிரிவினை செய்யவும், இரண்டாம், மூன்றாம் வாதிகளுக்கு முறையே 1/4 பங்கு பாகம் சுவாதீனம் செய்யவும். 4,5 வாதிகளுக்கு 1/2 பங்கு பாகம் சுவாதீனம் செய்யவும். பிரதிமாதம் ரூ.150 வீதம், இடைக்கால வருமானம் பெறவும், தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>பிரதிவாதிகளின் எதிர்வழக்குரை சுருக்கம் :</u> TNPSC - SPECIMEN

இராஜா பாலசுப்பிரமணியமும் லோநாயகி அம்மாளும் சட்டப்பூர்வமாக திருமணம் செய்து கொண்ட கணவன் மனைவி என்பதால் முதல் பிரதிவாதி இராஜா பாசுப்பிரமணியத்தின் மகள் என்ற பிரதிவாதிகள் கூறுகின்றனர். வாதிகள் தூரத்து உறவினர் / வாரிசு என்பதால் தாவா சொத்தில் அவர்களுக்கு எவ்வித உரிமையோ அனுகூலமோ இல்லை. இராஜா பாலசுப்பிரமணியம் உயிருடன் இருந்த போதே முதல் பிரதிவாதி அவருடைய மகளாக கருதப்பட்டார். இராஜா பாலசுப்பிரமணியம் ஒரு உயில் மூலம் தாவா சொத்துக்களை முதல் பிரதிவாதி பெயரில் எழுதி வைத்து அதை அவள் அனுபவிக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார். இராஜா பாலசுப்பிரமணியத்திற்கும் லோகநாயகி அம்மாளுக்கும், கள்ளத்தொடர்பு இருந்ததாக சொல்லப்படுவதை பிரதிவாதிகள் மறுக்கின்றனர். பிரதிவாதிகள் இராஜா பாலசுப்பிரமணியத்தின் ஈமச் சடங்குகளை செய்துள்ளனர். எனவே, அவருடைய சொத்துக்களை அடைய உரிமை கோருகின்றனர். முதல் பிரதிவாதி அவருடைய சட்டப்பூர்வ வாரிசு எனவே, அவர் தாவா சொத்தை அடைய தகுதியானவர். பிரதிவாதிகள், தாவா சொத்தில் தாங்கள் சட்டத்திற்கு புறம்பாக வசிப்பதாக சொல்லுவதை மறுத்துள்ளனர். சொத்தில் உரிமையோ அனுகூலமோ கோர வாதிகளுக்கு உரிமை இல்லை. வாதிகளுக்கு பிரதிமாதம் ரூ.150/- இடைக்கால வருமானம் கோரவும் உரிமை இல்லை. தாவா சொத்தானது மிகவும் பழைய இடிந்த கட்டிடம். ஆகையால், தாவா செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென கோரப்படுகிறது.

முதல் பிரதிவாதி தனது கூடுதல் எதிர்வழக்குரையில் தான் இறந்த இராஜா பாலசுப்பிரமணியத்தின் சட்டபூர்வ வாரிசு என்றும் தான் தாவா சொத்தின் முழுமையான உரிமையாளர் என்றும் அவருடைய தகப்பனாரின் இறப்பு வரை பிரதிவாதிகள் அச்சொத்தின் சுவாதீனத்தில் இருந்தனர் என்று குறிப்பிடுகின்றார். இராஜா பாலசுப்பிரமணியம் தனது கடைசி காலத்தில் இரண்டாவது வாதியின் உடன் இருந்தார் என்பதை மறுக்கின்றார். இறந்த இராஜா பாலசுப்பிரமணியத்தின் ஒரே சட்டப்பூர்வ. வாரிசு தான் என்றும், அது இராஜா பாலசுப்பிரமணியம் மற்றும் அவரது மனைவி நீலாம்பாள் உயிருடன் இருந்தபோதே அங்கீகரிக்கப்பட்டது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

**Suit for partition of the plaintiffs' share in the suit property and mesne profits.**

TNPSC - SPECIMEN

**The averments in the plaint are briefly as follows :**

The first plaintiff is the younger sister of one Raja Balasubramania Mudaliar. The second and third plaintiffs are daughters of Dhanapathi Ammal, the elder sister of the first plaintiff and Raja Balasubramaniam. The first plaintiff's father was Raja Mudaliar. Kumaravel Mudaliar and Somasundara Mudaliar were brothers of the said Raja Mudaliar. Somasundara Mudaliar died in the year 1920, leaving behind him surviving his widow and a son Masilamani. Kumaravel, Raja and Masilamani entered into a partition agreement of the joint family properties on 24-01-1925 in which the suit property fell to the share of Raja Mudaliar. Raja Mudaliar died on 20-4-1925 leaving behind him surviving his only son Raja Bala Subramaniam, two daughters Dhanapathi Ammal and Santhanayaki Ammal and his widow Pappathi Ammal. Dhanapathi Ammal had three daughters Doraikannu, Jayalakshmi, the 2nd plaintiff and Nagarathinam, the third plaintiff. Dhanapathi Ammal died in or about 1946. Doraikannu died in Singapore. Raja Balasubramaniam was married to one Neelambal Ammal in the year 1918. They had no issues. Neelambal Ammal died on 16-3-1959. Raja Balasubramaniam died on 18-8-1969 at T.B.Sanitorium. Soon after the death of his father Raja Mudaliar, his son RajaBalasubramaniam became the absolute owner of the suit property and he was in possession of the same till he died. The first defendant was born to Raja Balasubramaniam and Loganayaki Ammal. The second defendant is the husband of the first defendant. The plaintiffs understand that due to the illicit intimacy between Raja Balasubramaniam and Loganayaki Ammal, the first defendant was born. Since Raja Balasubramaniam wanted to keep the matter secret, he did not take the matter to any of his relatives nor intimated the birth of the child to anyone. After a year of the birth of the first defendant, there were differences between Raja Balasubramaniam and Loganayaki Ammal, and therefore Loganyaki Ammal left Madras and went to live at Irunpuliyur and the child continued to live with Raja Balasubramaniam and Neelambal Ammal. In the year 1961 the first defendant was married to the 2nd defendant at Madras. Raja Balasubramaniam retired from service in 1955 and thereafter he was employed as Security Officer in Messrs T.I. Cycles of India Ltd for a period of five years. During that time, he sold some of his properties at

TNPSC - SPECIMEN

Walajabad and with the sale proceeds and with the aid of the service benefits, he completely renovated the suit property. After the death of the said Raja Balasubramaniam, the first defendant issued a notice dated 27-3-1971 to the 2nd plaintiff's husband Seetharama Mudaliar claiming herself to be the heir of Raja Balasubramniam, demanded the return of certain cash and other personal effects of Raja Balasubramaniam. The said contention was promptly refuted by a notice dated 27-4-1971. The plaintiffs state that Raja Balasubramaniam died without any legal issues. The first defendant is not the legal heir of the said Raja Balasubramaniam and she has no manner of right over the property and estate of Raja Balasubramaniam. There was no relationship of husband and wife between Raja Balasubramniam and Loganayaki Ammal and therefore in the absence of any such relationship, the first defendant cannot be said to be the legitimate daughter of Raja Balasubramaniam. The first and second defendants have no manner of right to be in possession of the property. The defendants are in illegal occupation of the suit property. Being the only heirs of the said Raja Balasubramaniam, the first plaintiff is entitled to one half share in the suit property. They are also entitled to claim mesne profits from the defendants from the date of the death of Raja Balasubramaniam, but they are waiving their claim of mesne profits upto the date of the suit. They are claiming the mesne profits from the date of the suit. The first plaintiff reported dead and plaintiffs 4 and 5 were brought on record as legal representatives of the first plaintiff as per order in I.A.No.246/74 dt.8-3-1974. Hence the suit for declaration that the plaintiffs are the joint owners of the suit property; for partition of the suit property by metes and bounds and put the 2nd, 3rd plaintiffs in possession of one fourth share each respectively and the plaintiffs 4 and 5 be put in possession of one half share in the suit property and for recovery of mesne profits at Rs.150/-p.m. from the defendants.

**Written statement of the defendants in brief :**

The defendants contend that the relationship between Raja Balasubramaniam and Lokanayaki Ammal was that of legally married husband and wife and the first defendant is therefore a daughter of Raja Balasubramaniam. The plaintiffs are remote heirs and cannot claim any manner of right, title or interest in the suit property. During the life time of Raja Balasubramaniam, the first defendant was regarded as his own daughter. Raja Balasubramaniam left a Will in and by which he bequeathed the suit property to the first defendant to be enjoyed by her. The defendants deny that there was any illicit intimacy between Raja Balasubramaniam and Lokanayagi Ammal. The defendants performed the funeral ceremonies and so they rightly claim to succeed to the estate of Raja Balasubramaniam. The first defendant is his heir and legitimate issue and so she is entitled to the suit property. The defendants deny that they are not in legal occupation of the suit property. The plaintiffs are not entitled to claim any right or interest in the property. The plaintiffs are not entitled to claim mesne profits at Rs.150/-per month. The suit property is a very old and a dilapidated building. Hence they pray that the suit may be dismissed with costs.



TNPSC - SPECIMEN



[திருப்புக/Turn over

**<u>In the additional written statement,</u>** the first defendant contends that she is the lawful issue of deceased Raja Balasubramaniam, who was the absolute owner of the suit property and the defendants were in possession of the same till the death of her father. She denies that Raja Balasubramaniam stayed with the second plaintiff during his last days. She is the only legal issue of the deceased Raja Balasubramaniam and she was acknowledged to be so by him and his wife Neelambal during their life time.

3. தாவா சொத்தின் காலி சுவாதீனத்தை ஒப்படைக்கக்கோரி பிரதிவாதியை வலியுறுத்தவும். பிரதிவாதி ரூ.360/- வாடகை பாக்கி கொடுக்கவும். தாவா சொத்தில் 01.03.1975-முதல் 31.03.1975-வரை அடைபயன் எதிரீடு கோரியும், தாவா தாக்கல் செய்த நாள் முதல் சுவாதீனம் ஒப்படைக்கும் நாள் வரை மாதம் ஒன்றுக்கு ரூ.40/- நஷ்டஈடு பிரதிவாதி கொடுக்க வலியுறுத்தியும் மற்றும் செலவுத் தொகைக் கோரியும் இத்தாவா தாக்கல் செய்யப்படுகிறது.

TNPSC - SPECIMEN

<u>தாவா சாட்டுரையின் விவரம் பின்வருமாறு :</u>

வாதி - தேவஸ்தானம், தாவா அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள எண்-13அ, ஜீனீஸ் சாலையில் உள்ள கட்டிட வளாகத்தின் உரிமையாளர், பிரதிவாதி, அவ்வளாக கட்டிடத்தில் பிரதிமாதம் ரூ.40/- செலுத்தும் ஓர் வாடகைதாரர், பிரதிவாதி ஜுன் 1974-முதல் வாடகை செலுத்த தவறியும் புறக்கணித்தும் உள்ளார். எனவே, வாதி தனது வழக்கறிஞர் மூலம் 25.01.1975 தேதியிட்ட அறிவிப்பு வாயிலாக பிப்ரவரி 1975-ல், பிரதிவாதியின் வாடகை குடியிருப்பை முடிவுக்கு கொண்டு வந்தார். பிரதிவாதி அந்த அறிக்கையினை 06.02.1975-ல் ஒப்புகை செய்துள்ளார். எனவே, வாதி இந்த தாவாவினை, தாவா சொத்தை மீட்கவும், ஜுன் 1974 முதல் ஜனவரி 1975 வரை ரூ.360/- வாடகை பாக்கி செலுத்தக்கோரியும், 01.03.1975 முதல் பிராது தாக்கல் செய்த தேதியான 31.03.1975 வரை தாவா சொத்தில் குடியிருந்த வகையில் பிரதிமாதம் ரூ.40/- நஷ்ட ஈடாக செலுத்துக்கோரியும், மேலும் தாவா தாக்கல் செய்த நாள் முதல் தாவா சொத்தின் சுவாதீனம் ஒப்படைக்கும் நாள் வரை நஷ்ட ஈடாக பிரதிமாதம் ரூ.40/- வீதம் செலுத்தக் கோரியும் மற்றம் செலவுத் தொகைக்காகவும் தாக்கல் செய்யப்படுகிறது.

<u>பிரதிவாதியின் கூற்றுரை பின்வருமாறு :</u>

பிரதிவாதி தாவா வளாக கட்டிடத்தில் தான் வாடகைதாரர் என்பதை ஒப்புக் கொண்டுள்ளார். வெகுநாட்களாக வாடகைதாரராக இருப்பதாக கூறுகின்றார். பிரதிவாதி தான் முறையாக ஜுன் 1974-வரை வாடகை செலுத்தி வந்ததாகவும், பின்னர் வாதி வாடகை வாங்க மறுத்ததாகவும் கூறியுள்ளார். இருப்பினும் நாளது தேதி வரை பிரதிவாதி வாடகை செலுத்தியுள்ளார். பிரதிவாதி தனது வாடகைக் குடியிருப்பானது தமிழ்நாடு கட்டிடங்கள் (குத்தகை மற்றும் வாடகை கட்டுப்பாடு) சட்டம், 1960-க்கு உட்பட்டது என்றும், ஆகையினால் வாதிக்கு சுவாதீனம் கோரி இந்நீதிமன்றத்தில் வழக்கு

தாக்கல் செய்ய முடியாது என்றும், அந்த காரணத்தினால், இத்தாவா தள்ளுபடி செய்யத்தக்கது என்றும் கூறியுள்ளார். வாடகை குடியிருப்பு முடிவுக்கு கொண்டுவர அனுப்பிய அறிவிப்பு சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்றும், வாதிக்கு சுவாதீனம் கோர எவ்வித உரிமையும் இல்லை என்றும் கூறியுள்ளார். பிரதிவாதி வாடகை பாக்கியான ரூ.350/-ஐ செலுத்துவதற்கு எப்பொழுதும் தயாராக இருந்தார். ஆனால் வாதி அதனை வாங்க மறுத்து விட்டார் என்றும் கூறியுள்ளார். இத்தாவா, நல்லெண்ணமற்றது என்பதால் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று பிரதிவாதி கோரியுள்ளார்.

Suit for directing the defendant to deliver vacant possession of the suit property, for directing the defendant to pay Rs.360/- being the arrears of rent and to pay damages, for use and occupation from 01-03-1975 to 31-3-1975 and for directing the defendant to pay Rs.40/- per month for damages for use and occupation from date of plaint till date of delivery of possession and for costs of the suit.

TNPSC - SPECIMEN

**The averments in the plaint in brief are :**

The plaintiff-Devasthanam is the owner of premises No.13A, Jeenis Road, more fully described in the plaint schedule. The defendant was a tenant of the said premises on a monthly rent of Rs.40/-. The defendant had failed and neglected to pay the rent from June 1974. The plaintiff, therefore, determined the tenancy of the defendant with the end of the month of February 1975 by issuing a notice dated 25-1-1975 through counsel. The defendant had acknowledged the said notice on 06-02-1975. The plaintiff is obliged to come forward with this suit for recovery of possession of the suit property and for Rs.360/- being the arrears of rent due from June 1974 to January 1975, and for recovery of damages for use and occupation @ Rs.40/- per month from 1-3-1975 to 31-3-1975 which is the date of plaint and thereafter at Rs.40/- per month till date of delivery of possession of the suit property and for costs of the suit.

**The defendant pleads as follows :** The defendant admits that he is a tenant in respect of the suit premises, but states that he has been a tenant for a longtime. The defendant alleges that he has been paying rent regularly and in or about June 1974, the plaintiff refused to receive the rents. However, this defendant has paid rents up to date. The defendant contends that the tenancy is one covered by the Tamilnadu Buildings (Lease and Rent Control) Act, 1960 and hence the plaintiff is not entitled to maintain the suit for possession in this court and on this ground the suit is liable to be dismissed. It is also contended that notice to quit is not valid in law and the plaintiff is not entitled to claim possession. It is alleged that the defendant was always ready and willing to pay the sum of Rs.350/- as arrears and it is only the plaintiff, who has been refusing to receive the same. The defendant contends that this suit is not bonafide and he prays that the suit may be dismissed with costs.

4. <u>அடமான சொத்து மீட்பு தாவா :</u>

தாவா சாட்டுரைகள் பின்வருமாறு : வாதி தாவா சொத்து குறித்து 09.11.1922-ல் சின்னன் என்பவர் பெயருக்கு ஒரு அடமான பத்திரம் ஏற்படுத்தியுள்ளார். அடமானம் பெறுபவரின் வாரிசுகள் என்ற அடிப்படையில் பிரதிவாதிகள் தாவா சொத்தின் சுவாதீனத்தில் உள்ளனர். வாதி அடமானக் கடன் தொகையை திருப்பி செலுத்த தயாராக உள்ள போதும், பிரதிவாதிகள் அந்த தொகையை பெற்றுக் கொண்டு தாவா சொத்தினை ஒப்படைக்க தயாராக இல்லை. எனவே, இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>பிரதிவாதி எதிர் வழக்குரை தாக்கல் செய்து கீழ்க்கண்டவாறு கூறியுள்ளார் :</u>

வாதியும் மற்றவர்களும் பெற்ற கடன் சம்பந்தமாக ஒரு அருணாச்சலம் ராமலிங்கம் என்பவர் உ.வ.எண். 445/1957 என்ற வழக்கினை தாக்கல் செய்து, வழக்கு சொத்து மற்றும் இதர சொத்துக்கள் சம்பந்தமாக அடமான மீட்பு உரிமையை கிரையம் பெற்றுள்ளார். எனவே, இந்த வாதிக்கு வழக்குச் சொத்தினை பொறுத்த அடமான மீட்பு பரிகாரம் கோர எந்த உரிமையும் இல்லை.

<u>வாதியின் பதில் உரை</u>

இவ்வழக்கு பிரதிவாதிகள் எதிர்வாதுரையில் கூறியுள்ள சாட்டுரைகளை மறுத்து வாதி ஒரு பதில் உரை தாக்கல் செய்துள்ளார்.

TNPSC - SPECIMEN

**<u>Suit for redemption of Mortgage.</u>**

**<u>The plaint averments are as follows :-</u>**

Plaintiff executed a mortgage on 09-11-1922 in respect of suit property in favour of one Chinnan. As heirs of mortgagee, the defendants are in possession of the suit property. Though the Plaintiff is ready to pay the mortgage amount, the defendants are not amenable to accept the amount and surrender the property. Hence, the suit.

**<u>The defendants have filed a written statement contending as follows :</u>**

For the debt of plaintiff and others, one Arunachalam Ramalingam filed O.S.445 of 1957 and purchased the equity of redemption of the suit property and other properties and therefore, the present plaintiff has no right to redeem the suit property from the defendants.

**<u>Plaintiff's Reply statement :-</u>**

The plaintiff has filed a replication denying contentions of the contesting defendants in their written statement.

## பிரிவு — ஆ

## SECTION B — (2 × 30 = 60)

### தீர்ப்புரை எழுதுதல்

### WRITING JUDGMENT

TNPSC - SPECIMEN

குறிப்பு :
Note :

i) விண்ணப்பதாரர்கள் வழக்கின் தலைப்பு (Cause Title), நீதிமன்ற எண், நீதிபதியின் பெயர், வழக்கின் எண், வழக்கறிஞர்களின் பெயர்கள் போன்றவை குறிப்பிட தேவையில்லை. அவ்வாறு குறிப்பிட்டாலும் அதற்கு தனியாக மதிப்பெண்கள் வழக்கப்படமாட்டாது. வழக்கு சங்கதிகள் மற்றும் சாட்சியங்களை பரிசீலிக்கப்படும் விதம், சட்டத்தின் பயன்பாடு மற்றும் தீர்வு முடிவுகளுக்காக குறிப்பிடப்பட்டுள்ள காரணங்களின், அடிப்படையிலேயே மதிப்பெண்கள் வழங்கப்படும்.

Candidates need not write the cause title of the case, court number, the name of the Judge, case number, name of the Advocates etc., No marks will be awarded for writing cause title. Marks will be awarded based on : (i) appreciation of facts and evidence (ii) for application of law, and (iii) the reasoning given by the candidates for arriving at whatever conclusion they have reached.

ii) விண்ணப்பதாரர்கள் தங்களை நீதிமன்றத்தின் நடுவராக அனுமானித்து, வழங்கப்பட்டுள்ள எழு வினாக்களுக்கு தீர்ப்புரை எழுத வேண்டும்.

The candidates are to assume the role of the Presiding Officers and they are to write judgment, commencing with answering the issues.

iii) இந்த பிரிவில் இரண்டு கேள்விகள் உள்ளன. அவை அனைத்திற்கும் விடை அளிக்க வேண்டும். ஒவ்வொரு கேள்வியும் 30 மதிப்பெண் கொண்டது.

There are 2 questions in this Section and each question carries 30 marks. Candidates are supposed to answer all questions.

5. <u>பிராதின் சுருக்கம் :</u>

வழக்குச் சொத்து காலஞ்சென்ற சாமி என்பவருக்கு பாத்தியபட்டதாகும். சாமிக்கு ஆனந்தன், சேஷு என்ற இரு மகன்களும் ராஜம்மாள் என்ற மகளும் இருந்தனர். ஆனந்தன் 14.07.1970 தேதியிலும், சேஷு 14.12.1974 தேதியிலும், ராஜம்மாள் 11.11.1972 தேதியிலும் காலமானார்கள். சேதுராமன் என்பவர் ஆனந்தனின் மகனாவார். அவர் 15.05.1975ல் காலமானார். வாதி மைதிலி சேதுராமனின் மனைவியாவார். ராஜம்மாளுக்கு ஸ்ரீராமன் என்ற மகனும், கல்யாணி என்ற மகளும் உள்ளனர்.

ஸ்ரீராமன் இவ்வழக்கின் பிரதிவாதியாவார். கல்யாணி தனது தாய்மாமன் சேஷுவை மணந்தார். அவர்களுக்கு குழந்தைகள் இல்லை. சாமி காலமான பிறகு அவரது சொத்துக்கள் அனைத்தும் அவர்கள் பிள்ளைகளிடையே பாகம் பிரிக்கப்பட்டு இந்த வழக்குச் சொத்து சேஷுவின் பாகத்திற்கு ஒதுக்கப்பட்டது. சேஷுவின் மறைவிற்குப் பின்னர் வழக்கு சொத்து அவரது மனைவி கல்யாணிக்கு முறைப்படி உரிமையானது. இந்த வழக்கின் பிரதிவாதி கல்யாணியின் சகோதரர் ஆவார். கல்யாணி தன்னுடைய சொத்துக்கள் குறித்து விருப்புறுதி ஏதும் செய்யாமல் 10.07.1987ல் காலமானார். கல்யாணியின் இறப்பிற்கு பிறகு இந்து வாரிசுரிமைச் சட்டப்பிரிவு 15(1)ன் கீழ் வாதி வழக்குச் சொத்துக் குறித்து வாரிசு என்ற அடிப்படையில் உரிமைக் கோருகிறார். கல்யாணியின் சகோதரர் ஆன பிரதிவாதி வழக்குச் சொத்தின் சுவாதினத்தை எடுத்துக் கொண்டதால், வாதி வழக்குச் சொத்தில் தன்னுடைய உரிமையை விளம்புகை கோரியும், வழக்குச் சொத்தில் தன்னுடைய உரிமையை விளம்புகை கோரியும், வழக்குச் சொத்துப் பொறுத்து சுவாதின மீட்பு பரிகாரம் கோரியும் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

TNPSC - SPECIMEN

**பிரதிவாதியின் எதிர்வழக்குரையின் சுருக்கம் :**

பிரதிவாதி வழக்குச் சொத்தின் சுவாதினத்தில் உள்ளார் என்றும், இந்து வாரிசுரிமைச் சட்டம், 1956ன் படி பிரதிவாதி மட்டுமே கல்யாணிக்கும், அவரது கணவருக்கும், சட்டப்படி வாரிசு என்றும் குறிப்பிட்டு, வாதியின் கூற்றுக்களை மறுத்துள்ளார்.

**எழு வினாக்கள் :**

1. வாதி மறைந்த கல்யாணியின் வாரிசா?
2. பிரதிவாதி கோருவது போல் அவர் கல்யாணி மற்றும் சேஷுவின் வாரிசுதாரர் என்ற அடிப்படையில், பிரதிவாதி வாதியை நீக்குறவு செய்தாரா?
3. வாதி கோருவது போல் அவருக்கு உரிமை விளம்புகை மற்றும் சுவாதின மீட்பு பரிகாரம் கிடைக்கதக்கதா?
4. வேறு என்ன பரிகாரம்?

**வாதி தரப்பு சாட்சியம் :**

1. வா.சா.1. - வாதி - மைதிலி

இவர் தன்னுடைய வழக்கினை ஒத்து சாட்சியம் அளித்துள்ளார்

**பிரதிவாதி தரப்பு சாட்சியம் :**

1. பி.வா.சா.1. - பிரதிவாதி - ஸ்ரீராமன்

இவர் தன்னுடைய வழக்கினை ஒத்து சாட்சியம் அளித்துள்ளார்

**வாதுரைகள் :**

வாதியின் வழக்கறிஞர் வாதி காலஞ்சென்ற கல்யாணியின் ஒரே வாரிசு என வாதித்துள்ளார்.

பிரதிவாதியின் வழக்கறிஞர் பிரதிவாதி காலஞ்சென்ற கல்யாணியின் ஒரே வாரிசு என வாதித்துள்ளார்.

இருதரப்பிலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட சங்கதிகள் :

1. வழக்குத் தரப்பினர்களுக்கு இடையேயான உறவு முறை ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. மேலும் வழக்குச் சொத்து சேஷுவின் காலத்திற்குப் பிறகு கல்யாணிக்கு முறைப்படி உரிமையானது என்பதும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

2. பிரதிவாதிதான் வழக்குச் சொத்தின் சுவாதினத்தில் உள்ளார் என்பதும் இருதரப்பிலும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

இந்து வாரிசுரிமைச் சட்டம் 1956. பிரிவுகள் 8, 15, 16 மற்றும் அட்டவணை (schedule) கீழே தகவலுக்காக குறிப்பிடப்பட்டுள்ளது.

TNPSC - SPECIMEN

மேற்கண்ட விபரங்களின் அடிப்படையில் தீர்ப்பு எழுதுக.

**பிரிவு 8 ஆண்களின் வாரிசுகள் பற்றிய பொது விதிகள் :**

உயில் மூலம் தமது சொத்துக்களுக்கு ஒரு ஏற்பாடு செய்து வைக்காமல் ஆண் இந்து ஒருவர் இறந்து போனால், அவருடைய சொத்துக்களை இந்த இயலின் வகையங்களின்படி அடியிற்கண்ட வாரிசுகள் அடைவார்கள். அதாவது

(அ) முதலில் இச்சட்டத்தின் அட்டவணையில் முதல் வகுப்பு வாரிசுகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளவர்கள் அடைவார்கள்

(ஆ) இரண்டாவதாக, முதல் வகுப்பு வாரிசுகளில் யாருமில்லாவிட்டால், இந்த சட்டத்தின் அட்டவணையில் இரண்டாம் வகுப்பு வாரிசுகளாகக் குறிப்பிட்டுள்ளவர்கள் அடைவார்கள்

(இ) மூன்றாவதாக, இரண்டு வகுப்புகளிலும் வாரிசுதாரர்கள் யாருமில்லாவிட்டால், இறந்தவரின் பங்காளிகள் சொத்துக்களை அடைவார்கள்.

(ஈ) கடைசியாக, பங்காளிகள் இல்லாவிட்டால் இறந்தவருடைய சொத்துக்களை அவரது பந்துக்கள் அடைவர்.

**பிரிவு 15 இந்துப் பெண்ணின் வாரிசு பற்றிய பொது விதிகள் :**

(1) உயில் எழுதாமல் இறந்து போன இந்துப் பெண் ஒருவரின் சொத்தை, பிரிவு 16-இன் விதியில் விவரிக்கப்பட்டவாறு அடியிற்கண்ட வாரிசுகள் அடைவர்

(அ) முதலாவதாக, இறந்த பெண்ணின் மகன்கள் மற்றும் மகள்கள் (முன்னதாக இறந்து போன மகனின் அல்லது மகளின் குழந்தைகள் உட்பட) மற்றும் கணவர் அடைவார்கள்

(ஆ) இரண்டாவதாக, கணவனின் வாரிசுகள் அடைவார்கள்

(இ) மூன்றாவதாக, தாயும் தந்தையும் அடைவார்கள்

(ஈ) நான்காவதாக, தந்தையின் வாரிசுகள் அடைவார்கள்

(உ) கடைசியாக தாயின் வாரிசுகள் அடைவார்கள்

(2) உட்பிரிவு (1)-இல் யாது கண்டிருந்த போதிலும்,

(அ) இந்துப் பெண் ஒருவர் தன்னுடைய தந்தை அல்லது தாயின் வாரிசு என்ற முறையில் அடைந்த சொத்துக்களை, அவளுக்கு மகனோ மகளோ (முன்னதாக இறந்து போன மகனின் அல்லது மகளின் குழந்தைகள் உள்ளடங்கலாக) இல்லாத போது, உட்பிரிவு (1)-இல் குறிப்பிடப்பட்ட மற்ற வாரிசுகளுக்குப் பொருந்தாது. ஆனால் தந்தையின் வாரிசுகளுக்கு பொருந்தும்

(ஆ) இந்துப் பெண் ஒருவர் தன்னுடைய கணவன் அல்லது மாமனாரின் வாரிசு என்ற முறையில் அடைந்த சொத்துக்களை, அவளுக்கு மகனோ மகளோ (முன்னதாக இறந்து போன மகனின் அல்லது மகளின் குழந்தைகள் உள்ளடங்கலாக) இல்லாத போது உட்பிரிவு (1)-இல் குறிப்பிடப்பட்ட வாரிசுகள் அடையமாட்டார்கள்; அவளது கணவனின் வாரிசுகள் அடைவார்கள்.

**பிரிவு 16 இந்துப் பெண்ணொருவரின் வாரிசுகளும் அவர்களுக்கிடையில் பங்களிப்பு முறையும் :**

இந்துப் பெண்ணொருவரின் வாரிசுகள் யார் என்பது பிரிவு 15-இல் குறிப்பிடப் பட்டுள்ளது. உயில் எழுதி வைக்காமல் இறந்து போன பெண்ணொருவரின் வாரிசுகளுக்கிடையில் பின்வரும் விதிகளின்படி அவரது சொத்தைப் பங்கிட்டுக் கொடுத்தல் வேண்டும் அதாவது :

விதி 1 : பிரிவு 15, உட்பிரிவு (1)-இல் குறிப்பிடப்பட்ட வாரிசுக்களுக்கிடையில் ஒரு பிரிவில் உள்ளவர்கள் அடுத்த பிரிவிலும் பெறலாம், அதே பிரிவில் உள்ளடங்கியவர்கள் ஒரே நிலையில் எடுத்துக் கொள்ளப்படுவார்கள்.

விதி 2 : இறந்த இந்துப் பெண்ணொருவரின் மகனோ, மகளோ முன்னதாக இறந்திருந்து அம்மகனுக்கோ, மகளுக்கோ குழந்தைகள் இருந்தால், இறந்த மகனோ மகளோ அந்தப் பெண் இறக்கும் போது உயிருடன் இருந்தால் எவ்வளவு பாகத்தைப் பெறுவார்களோ, அதைத்தான் அவர்களின் குழந்தைகள் பெறுவார்கள்.

விதி 3 : பிரிவு 15, உட்பிரிவு (1), உட்பிரிவு (2), கூறுகள் (ஆ), (ஈ), (உ)-இல் குறிப்பிடப்பட்ட வாரிசுகளுக்கு, உயில் எழுதி வைக்காமல் இறந்தவரின் சொத்து சேரும் என்பது, சூழ்நிலைக்கேற்ப, தந்தையின் வாரிசுகளுக்கோ, தாயின் வாரிசுகளுக்கோ அல்லது கணவனின் வாரிசுகளுக்கோ சொத்து சொந்தமாக இருந்து அவர்கள் இந்துப்பெண் இறந்தவுடன் இறந்து போயிருந்தால், அவர்களுடைய சொத்துக்களை விதிகளின் படி எந்த வாரிசுகள் அடைவார்களோ இந்த விதி பொருந்தும்.

அட்டவணை

TNPSC - SPECIMEN

வகுப்பு I

மகன் ; மகள் ; விதவை (மனைவி) ; தாய் ; முன்னதாக இறந்த மகனின் மகன் ; முன்னதாக இறந்த மகனின் மகள் ; முன்னதாக இறந்த மகளின் மகன் ; முன்னதாக இறந்த மகளின் மகள் ; முன்னதாக இறந்த மகனின் மனைவி (விதவை) ; முன்னதாக இறந்த மகனின் முன்னதாக இறந்த மகனின் மகன் ; முன்னதாக இறந்த மகளின் முன்னதாக இறந்த மகனின் மகன் ; முன்னதாக இறந்த மகனின் முன்னதாக இறந்த மகனின் மனைவி (விதவை) ; முந்தி இறப்புற்ற மகளின் முந்தி இறப்புற்ற மகளின் மகன் ; முந்தி இறப்புற்ற மகளின் முந்தி இறப்புற்ற மகளின் மகள் ; முந்தி இறப்புற்ற மகளின் முந்தி இறப்புற்ற மகனின் மகள் ; முந்தி இறப்புற்ற மகனின் முந்தி இறப்புற்ற மகளின் மகள்.

வகுப்பு II

I. தந்தை

II. (1) மகனின் மகளின் மகன் ;

(2) மகனின் மகளின் மகள் ;

(3) சகோதரர் ;

(4) சகோதரி.

III. (1) மகளின் மகனின் மகன் ;

(2) மகளின் மகனின் மகள் ;

(3) மகளின் மகளின் மகன் ;

(4) மகளின் மகளின் மகள் ;

IV. (1) சகோதரரின் மகன் ;

(2) சகோதரியின் மகன் ;

(3) சகோதரரின் மகள் ;

(4) சகோதரியின் மகள் ;

V. தந்தையின் தந்தை ; தந்தையின் தாய்.

VI. தந்தையின் விதவை ; சகோதரரின் விதவை

VII. தந்தையின் சகோதரர் ; தந்தையின் சகோதரி

VIII. தாயின் தந்தை ; தாயின் தாய்.

IX. தாயின் சகோதரர் ; தாயின் சகோதரி.

இந்த அனைத்து சங்கதிகளையும் பரிசீலித்த தீர்ப்பு எழுதுக.

TNPSC - SPECIMEN

**<u>Plaint Averments in Brief :</u>**

The Suit property originally belonged to one late Samy, who had two sons Anandan and Seshu and daughter Rajammal. Anandan died on 14.7.1970 and Seshu died on 14.12.1974. Rajammal died on 11.11.1972. Anandhan had a son by name Sethuraman who died on 15.5.1975. Plaintiff Mythili is the widow of Sethuraman. Rajammal had a son by name Sriraman, who is the defendant in the suit and a daughter by name Kalyani. Kalyani was married to her uncle Seshu and they had no children. After the death of Samy all his properties had been partitioned among his children and the suit property has been allotted to Seshu. After Seshu's death it devolved upon his wife Kalyani. The Defendant also happens to be the brother of Kalyani. Kalyani died intestate on 10.7.1987. After the death of Kalyani, the plaintiff is claiming right over the suit property as per section 15(1) of the Hindu Succession Act. The defendant being the brother of Kalyani took possession of the suit property and hence the suit has been filed seeking the relief of Declaration of title and for recovery of possession.

## Defendant's written statement in brief

The defendant resisted the suit on the ground that he alone is the heir of Kalyani and her husband as per Hindu Succession Act, 1956. Defendant also claims himself to be in possession of the suit property.

**Issues :**

1. Whether the plaintiff is the legal heir of the deceased Kalyani?
2. Whether the defendant as legal heir of Kalyani and Seshu excluded the plaintiff as claimed by him?
3. Whether the Plaintiff is entitled for declaration of title and for recovery of possession?
4. To what other relief?

**Evidence :**

TNPSC - SPECIMEN

**Plaintiff side evidence :**

1. PW1 - Plaintiff Mythili has deposed in support of her case.

**Defendants side evidence :**

1. DW1 - Defendant Sriraman has deposed in support of his case.

**Arguments :**

Plaintiff's Counsel has claimed that the plaintiff is the sole legal heir of deceased Kalyani. Defendant's counsel has claimed that the defendant is the sole legal heir of Kalyani.

**Admitted facts :**

1. Relationship between parties and the fact that the suit property of Seshu devolved on his wife Kalyani after his death are admitted.
2. Defendant is in possession of the Property is also admitted.

The provisions of Section 8, 15, 16 and schedule of Hindu Succession Act, 1956 are provided for reference. With the above facts, the judgment shall be written.

Section 8 :

8. **General rules of succession in the case of males :**

The property of a male Hindu dying intestate shall devolve according to the provisions of this Chapter

(a) firstly, upon the heirs, being the relatives specified in class I of the Schedule ;

(b) secondly, if there is no heir of class I, then upon the heirs, being the relatives specified in class II of the Schedule ;

(c) thirdly, if there is no heir of any of the two classes, then upon the agnates of the deceased; and

(d) lastly, if there is no agnate, then upon the cognates of the deceased.

Section 15 :

TNPSC - SPECIMEN

15. **General rules of succession in the case of female Hindus :**

(1) The property of a female Hindu dying intestate shall devolve according to the rules set out in Section 16 :

(a) firstly, upon the sons and daughters (including the children of any pre-deceased son or daughter) and the husband;

(b) secondly, upon the heirs of the husband;

(c) thirdly, upon the mother and father;

(d) fourthly, upon the heirs of the father; and

(e) lastly, upon the heirs of the mother.

(2) Notwithstanding anything contained in sub-section (1)

(a) any property inherited by a female Hindu from her father or mother shall devolve, in the absence of any son or daughter of the deceased (including the children of any pre-deceased son or daughter) not upon the other heirs referred to in sub-section (1) in the order specified therein, but upon the heirs of the father; and

(b) any property inherited by a female Hindu from her husband or from her father-in-law shall devolve, in the absence of any son or daughter of the deceased (including the children of any predeceased son or daughter) not upon the other heirs referred to in sub-section (1) in the order specified therein, but upon the heirs of the husband.

## Section 16

### 16. Order of succession and manner of distribution among heirs of a female Hindu

The order of succession among the heirs referred to in section 15 shall be, and the distribution of the intestate's property among those heirs shall take place, according to the following rules, namely:

Rule 1 : Among the heirs specified in sub-section (1) of section 15, those in one entry shall be preferred to those in any succeeding entry and those including in the same entry shall take simultaneously.

Rule 2 : If any son or daughter of the intestate had pre-deceased the intestate leaving his or her own children alive at the time of the intestate's death, the children of such son or daughter shall take between them the share which such son or daughter would have taken if living at the intestate's death.

Rule 3 : The devolution of the property of the intestate on the heirs referred to in clauses (b), (d) and (e) of sub-section (1) and in sub-section (2) of section 15 shall be in the same order and according to the same rules as would have applied if the property had been the father's or the mother's or the husband's as the case may be, and such person had died intestate in respect thereof immediately after the intestate's death.

## THE SCHEDULE

TNPSC - SPECIMEN

## HEIRS IN CLASS I AND CLASS II

### CLASS I

Son ; daughter; widow; mother; son of a pre-deceased son; daughter of a pre-deceased son; son of a predeceased daughter; daughter of a pre-deceased daughter; widow of a pre-deceased son; son of a predeceased son of a predeceased son; daughter of a pre-deceased son of a pre-deceased son; widow of a pre-deceased son of a pre-deceased son. Son of predeceased daughter of a predeceased daughter; daughter of a pre-deceased daughter; daughter of a pre-deceased daughter of a pre-deceased son of a pre-deceased daughter; daughter of a pre-deceased daughter of a per-deceased son.

### CLASS II

I. Father.

II. (1) Son's daughter's son,

(2) Son's daughter's daughter,

(3) Brother,

(4) Sister.

III. (1) Daughter's son's son,

(2) Daughter's son's daughter,

(3) Daughter's daughter's son,

(4) Daughter's daughter's daughter.

IV. (1) Brother's son,

(2) Sister's son,

(3) Brother's daughter,

(4) Sister's daughter.

V. Father's father; father's mother.

VI. Father's widow; brother's widow.

VII. Father's brother; father's sister.

VIII. Mother's father; mother's mother.

IX. Mother's brother; mother's sister.

TNPSC - SPECIMEN

6. வாதியின் வழக்கு :

பிரதிவாதி வாதியிடமிருந்து ரூ.50,000/- 22.04.2016 தேதியிட்ட காசோலை மூலம் கடனாக பெற்றார். இந்த கடன் தொகையை ஆண்டொன்றிற்கு 12% வட்டியுடன் வாதி கேட்கும் போது திருப்பி தருவதாக ஒப்புக் கொண்டுள்ளார். பலமுறைக் கேட்டும், 10.10.2016 தேதியில் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியும் பிரதிவாதி கடன் தொகையை திருப்பி செலுத்தவில்லை எனவே வாதி அசல் ரூ.50,000/- மற்றும் ஆண்டொன்றிற்கு 12% வட்டியுடன் பிரதிவாதி திருப்பி தரவேண்டுமென கோரியுள்ளார்.

பிரதிவாதியின் வழக்கு

பிரதிவாதி வாதியிடம் எந்த தொகையும் கடனாக பெறவில்லை. மாறாக சுமார் 6 ஆண்டுகளுக்கு முன்பு வாதி தான் இந்த பிரதிவாதியிடம் ரூ.50,000/- கைமாற்றுக் கடனாக பெற்றுள்ளார். பிரதிவாதி அந்த தொகையை திருப்பி கேட்ட போது வாதி 22.04.2016 தேதியிட்ட இந்த வழக்கு காசோலையை கொடுத்தார். பிரதிவாதியும் அந்த காசோலையை வங்கியில் செலுத்தி தொகையை பெற்றுக் கொண்டார். இந்த வாதி, ஒரு உரிமையியல் வழக்கில் தனக்கு சாதகமாக சாட்சியம் அளிக்க பிரதிவாதியை கேட்டார். ஆனால், பிரதிவாதி மறுத்து விட்டார். எனவே வாதி அந்த பகையின் காரணமாக இந்த பொய் வழக்கினை பிரதிவாதிக்கு எதிராக தாக்கல் செய்துள்ளார். வாதிக்கு எந்த தொகையும் செலுத்த வேண்டியதில்லை, இந்த வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது.

எழு வினாக்கள் :

1. இந்த வழக்கு காசோலை பிரதிவாதிக்கு கைமாற்று கடனாக வழங்கபட்டதா?

2. பிரதிவாதியிடமிருந்து பெற்ற கடனை திருப்பி செலுத்தும் வகையில் இந்த வழக்கு காசோலை வாதியால் வழங்கப்பட்டதா?

3. வழக்கு பரிகாரம் வாதி பெற தகுதி உடையவரா?

4. வேறு என்ன பரிகாரம்?

வாதி தரப்பு சாட்சியம் :

1. வா.சா.1. - ஆக வாதி விசாரிக்கப்பட்டார். இவர் தன்னுடைய வழக்கினை ஒத்து சாட்சியம் அளித்துள்ளார்.

2. வா.சா.2. - பிரபு

   இவ்வழக்கு காசோலை பிரதிவாதிக்கு கடன் வழங்கும் பொருட்டு வாதியால் தரப்பட்டது என இவர் சாட்சியம் அளித்துள்ளார்.

வாதி தரப்பு ஆவணங்கள் : TNPSC - SPECIMEN

வா.சா.ஆ.1. - வாதி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு

பிரதிவாதி தரப்பு சாட்சியம் :

1. பி.வா.சா.1. - ஆக பிரதிவாதி விசாரிக்கப்பட்டார்.

பிரதிவாதி தனது குறுக்கு விசாரணையில் வாதி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு கிடைத்தவுடன், தான் வாதியை அணுகியதாகவும், இந்த காசோலையின் பேரில் தான் நடவடிக்கை ஏதும் எடுக்கப் போவது இல்லை என வாதி உறுதி அளித்ததால் தான் பதில் அறிவிப்பு ஏதும் கொடுக்கவில்லை என கூறியுள்ளார். மேலும், வாதி தன்னை சாட்சியம் அளிக்க அழைத்த வழக்கின் எண் குறித்த விவரம் தனக்கு தெரியாது என்றும் கூறியுள்ளார். மேலும், வாதி தனக்கு காசோலை கொடுக்கும் போது பிரபு உடனிருந்ததாகவும், தனக்கும் பிரபுவிற்கும் எந்த முற்பகையும் இல்லை என்றும் ஒப்புக் கொண்டுள்ளார்.

2. பி.வா.சா.2. - ஆக பிரதிவாதியின் சகோதரர் ராமசாமி விசாரிக்கப்பட்டார்.

இவர் வாதி பிரதிவாதியிடம் சுமார் 6 ஆண்டுகளுக்கு முன்பு கைமாற்று கடனாக ரூ.50,000/- பெற்றதாக சாட்சியம் அளித்துள்ளார்.

பிரதிவாதி தரப்பு ஆவணங்கள் : இல்லை.

வாதுரைகள் :

வாதியின் வழக்கறிஞர் மாற்று முறை ஆவணச் சட்டம் 118ன் கீழான துணிபுகளின் (Presumption) பலன்கள் வாதிக்கு கிடைக்கத்தக்கது என வாதிட்டார்.

பிரதிவாதியின் வழக்கறிஞர் மாற்று முறை ஆவணச் சட்டம் 139ன் கீழான துணிபுவின் (Presumption) பலன்கள் பிரதிவாதிக்கு கிடைக்கத்தக்கது என வாதிட்டார்.

இருதரப்பிலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட சங்கதிகள் :

1. 22.04.2016 தேதியிட்ட வழக்கு வாதியின் காசோலை பிரதிவாதியால் பணமாக்கப்பட்டது.

இந்த அனைத்து சங்கதிகளையும் பரிசீலித்து தீர்ப்பு எழுதுக.

**<u>The case of the Plaintiff :</u>**

The defendant borrowed from the plaintiff a sum of Rs. 50,000/- by way of cheque dt. 22.4.2016 agreeing to repay the same on demand with interest at 12% per annum. Despite repeated demands and issuance of legal notice dt. 10.10.2016. The defendant refused to repay the amount. Hence the Plaintiff has filed this suit claiming Rs. 50,000/- with interest at 12% per annum.

**<u>The case of the Defendant.</u>** TNPSC - SPECIMEN

The defendant has not borrowed any money from the Plaintiff. In fact the Plaintiff had taken a hand loan of Rs. 50,000/- from the defendant about 6 years ago and when the said amount was demanded, the Plaintiff had issued the suit cheque dt. 22.04.2016 which was encashed by the defendant. The Plaintiff had requested him to depose evidence in his favour in a civil suit, which he had refused. Because of this enmity the Plaintiff had filed the present false claim against the defendant. No amount is payable to the Plaintiff. Hence the suit is liable to be dismissed.

**<u>Issues :</u>**

1. Whether the suit cheque was issued as hand loan to the defendant?
2. Whether the Plaintiff had issued the suit cheque only towards repayment of the debt due towards the defendant?
3. Whether the Plaintiff is entitled to the suit claim?
4. To what other relief?

**Plaintiff's side evidence :**

1. Plaintiff has examined himself as PW1 and has deposed in favour of his case.
2. One Prabhu has been examined as PW2. He has deposed that the cheque was given by the plaintiff only as hand loan to the defendant.

   Exhibit Ex Al is the Legal notice issued by the plaintiff.

**Defendant's side evidence :**

1. Defendant examined as DW1 – Defendant had deposed in his cross examination that though he had received legal notice he had not sent any reply because when the defendant approached the plaintiff after receipt of the legal notice the Plaintiff had agreed not to proceed with any litigation in pursuant to the cheque. However he had admitted that he is not aware of the suit number for which he was called to depose in favour of the Plaintiff. The defendant has admitted that Prabhu was present when the Plaintiff gave him the suit cheque. He has also admitted that there is no previous enmity with Prabhu.
2. Defendant's brother Ramasamy examined as DW2.

   He has deposed that 6 years ago the Plaintiff had borrowed Rs. 50,000/- from the defendant as hand loan.

SEAL

Exhibits : NIL.

TNPSC - SPECIMEN

**Arguments :**

Counsel for the Defendant argued that presumption under Sec. 139 of Negotiable Instruments Act is in his favour. The counsel for the plaintiff has argued that presumption under Sec. 118 of Negotiable Instruments Act is in his favour.

**Admitted facts :**

1. The suit Cheque dated 22.4.2016 was encashed by the defendant

With the above facts, the Judgment shall be written.

---